**செய்தி வெளியீடு எண்: 772** **நாள்: 26.10.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று **(26.10.2018)** தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் விவசாயிகளின் நலனுக்காக அடங்கல் பதிவேட்டினை மின்னணு பதிவேடாக மாற்றம் செய்யும் இ–அடங்கல் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். மேலும், **1** கோடியே **7** லட்சத்து **86** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தாய்லாந்தில் உள்ள ஆசிய மண்டலத்தின் ஒருங்கிணைந்த பல்வகை பேரிடர் முன்னறிவிப்பு (RIMES) மையத்துடன் இணைந்து பல்வகை பேரிடர்களின் அதீத தாக்கத்தினை முன்னதாக அறிந்து அவசர முன்னெச்சரிக்கை மீட்பு நடவடிக்கைகளை முறைப்படுத்தும் இணையதள புவியியல் தகவல் முறை (GIS) அமைப்பினையும் (TN-SMART) துவக்கி வைத்தார்கள்.

அடங்கல் என்பது ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் விவசாயிகள் பருவ வாரியாக சாகுபடி செய்யும் பயிர்கள், அதன் விளைச்சல், நீர்ப்பாசன ஆதாரங்கள் போன்ற பல விவரங்கள் கிராம நிருவாக அலுவலர்களால் கைப்பட எழுதி பராமரிக்கப்படும் நில பதிவேடு ஆகும். அவ்வாறு சேகரிக்கப்படும் விவரங்களை ஒருங்கிணைத்து "ஜி'' அறிக்கை தயாரிக்கப்படுகிறது. அடங்கல் பதிவேட்டில் இவ்விவரங்கள் பதியப்படுவதால் மாநில, மாவட்ட, வட்ட மற்றும் கிராம அளவிலான உணவு உற்பத்தியினை கணக்கிடுவதில் இப்பதிவேடு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இவ்வாறு கிராம நிருவாக அலுவலர்களால் கைப்பட எழுதப்பட்டு வரும் அடங்கல் பதிவேடானது, மின்னணு பதிவேடாக மாற்றம் செய்யும் வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசால், **2017–18**ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் போது, விவசாயிகளின் நலனுக்காக இ–அடங்கல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, விவசாயிகளின் நலனுக்காக அடங்கல் பதிவேட்டினை மின்னணு பதிவேடாக மாற்றம் செய்யும் இ–அடங்கல் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

இந்த இ–அடங்கல் திட்டம், கிராம நிருவாக அலுவலர்கள் கையினால் அடங்கல் எழுதும் பணியை எளிமைப்படுத்தி, விவசாய பெருமக்களுக்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இ–அடங்கல் முறையில், கிராம நிருவாக அலுவலர்கள் பயிர் சாகுபடி சம்பந்தமான விவரங்களை பதிவு செய்வது மட்டுமின்றி, விவசாயப் பெருமக்களும் தங்களுக்கு சொந்தமான நிலத்தில், தாங்கள் பயிர் செய்துள்ள விவரங்களை அவர்களே பதிவிட வாய்ப்பளிக்கப்படுகிறது. கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் மேற்கொள்ளும் பதிவுகளுக்கு இடையே வேறுபாடு

இருப்பின், அப்பதிவு தானாகவே வருவாய் ஆய்வாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்களுக்கு குறியீடு செய்யப்பட்டு, அவ்வலுவலரின் நேரடி புலத் தணிக்கைக்குப் பின் திருத்தம் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இ–அடங்கல் முறையில், கிராம நிருவாக அலுவலர் பராமரிக்கும் பிற தொடர்புடைய 9 பதிவேடுகளையும் பதிவிறக்கம் செய்து கொள்ள இயலும். இ–அடங்கலைக் கொண்டு ஒவ்வொரு மாதமும் தயாரிக்கப்படும் ஜி அறிக்கை (G Return) மிக எளிதாக இறுதி செய்யப்படும். விவசாய பெருமக்கள் எவ்வித கட்டணமுமின்றி இ–அடங்கல் பதிவினை பார்வையிடவும், அடங்கல் நகல் பெற அரசு நிர்ணயித்த கட்டணம் செலுத்தி எந்நேரத்திலும், எவ்விடத்திலும் பதிவிறக்கம் செய்ய இயலும்.

இ–அடங்கல் முறையில், வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் புள்ளியியல் துறை அலுவலர்களுக்கு என தனியாக உள்ளீடுக்குறி (Login ID) உள்ளதால், அவர்களும் அவர்களது கள ஆய்வில் கண்டறிந்த பயிர் சாகுபடி சம்பந்தப்பட்ட பதிவுகளை பதிவு செய்ய முடியும். விவசாயம் மற்றும் விவசாயப் பெருமக்கள் தொடர்பாக தமிழ்நாடு அரசு எடுக்கும் கொள்கை முடிவுகளை உரிய நேரத்தில் விரைந்து செயல்படுத்திட இ–அடங்கல் முறை பெரிதும் உதவியாக இருக்கும். குறிப்பாக, வெள்ளம், வறட்சி போன்ற பேரிடர்களால் பயிர்களுக்கு ஏற்படும் சேத விவரங்களை துல்லியமாக கணக்கிடவும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணங்களை விரைவில் வழங்கவும் வழிவகை செய்கிறது.

வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு துறை, 1 கோடியே 7 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தாய்லாந்தில் உள்ள ஆசிய மண்டலத்தின் ஒருங்கிணைந்த பல்வகை பேரிடர் முன்னறிவிப்பு (RIMES) மையத்துடன் இணைந்து பல்வகை பேரிடர்களின் அதீத தாக்கத்தினை முன்னதாக அறிந்து அவசர முன்னெச்சரிக்கை மீட்பு நடவடிக்கைகளை முறைப்படுத்தும் இணையதள புவியியல் தகவல் முறை (GIS) அமைப்பினை (TN-SMART) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள். இந்த அமைப்பில் நவீன தொழில் நுட்பங்களின் மூலம் முன்னறிவிப்பு மற்றும் பேரிடர் அபாய தணிப்பு நடவடிக்கைகளுக்கான தகவல்களை சேகரித்தல், ஆவணப்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் செய்திகளை மக்களிடம் கொண்டு செல்லுதல் போன்ற பணிகளை செய்ய இயலும்.

இந்த அமைப்பின் கீழ் இந்திய வானிலை மையத்தால் வழங்கப்படும் மழை முன்னெச்சரிக்கை மற்றும் கடந்த காலங்களில் பெய்த வடகிழக்கு பருவமழையின் அளவு, நீர்த்தேக்கங்களின் இருப்பு ஆகியவற்றின் அடிப்படையிலும், தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும் வெள்ள அபாயம் ஏற்படும் என்று கண்டெறியப்பட்ட இடங்களில், எத்தகைய வெள்ள பாதிப்பு ஏற்படும் என்று கணிக்க முடியும். வெள்ளம் மட்டுமல்லாது

புயல், சுனாமி போன்ற பேரிடர்களின் தாக்கத்தையும் முன்கூட்டியே கணிக்க முடியும். இந்த முன்னெச்சரிக்கை தகவல்களை கொண்டு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையம் தகுந்த முன்னேற்பாடுகளை செய்து உயிர் இழப்புகளையும், அசையும் பொருட்சேதத்தையும் தவிர்க்க உதவும். இவ்வமைப்பானது எதிர்வரும் 2018 வடகிழக்கு பருவகாலத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த அமைப்பு குறித்த விவரங்களை www.tnsdma.tn.gov.in என்ற வலைதளத்தில் காணலாம்.

இதன் தொடர்ச்சியாக TN-SMART என்ற கைபேசி செயலியும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பேரிடர் குறித்த தகவல்கள், முன்னெச்சரிக்கைகள், மழைப்பொழிவின் அளவு ஆகியவற்றை பதிவு செய்யப்பட்ட பயனாளர்கள் அறிய இயலும். மேலும், இதன் மூலம் இருப்பிட அடிப்படையிலான உத்தேச மழையளவு, வெள்ள அபாயம் குறித்த முன்கணிப்பு மற்றும் வெள்ளத்தின் போது செய்ய வேண்டியவை / செய்யக்கூடாதவை குறித்த தகவல்கள் போன்றவற்றை இச்செயலி மூலம் பெற இயலும். மேலும், இச்செயலியானது தனிப்பட்ட எச்சரிக்கை ஒலியமைப்பு முறையை கொண்டது. இதனால் சுனாமி, புயல் போன்ற பேரிடர்களின் போது, அமைதி நிலையில் (Silent mode) வைக்கப்பட்டு இருக்கும் கைப்பேசியில் இருந்து கூட எச்சரிக்கை ஒலியுடன் செய்தியை பெற முடியும். இந்த எச்சரிக்கை ஒலி செய்தி பயனாளர்கள் பார்த்த பின்புதான் நிற்கும்.

இந்த இணையதள அமைப்பு மற்றும் செயலி, முன்னறிவிப்பு தகவல்களை அளிப்பதோடு மட்டுமில்லாமல், பொதுமக்களிடம் இருந்து வரும் அவசர உதவி அழைப்புகளையும் பதிவு செய்து, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைத்து, அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை கண்காணிக்க உயர் அலுவலர்களுக்கு உதவும். இதன் மூலம், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், ஆயத்த பணிகள், மீட்பு, நிவாரணம், மறுசீரமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை முழுமையாக கண்காணிக்க இயலும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் டாக்டர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் திரு. இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., வருவாய் நிருவாக இணை ஆணையர் திருமதி எம். லட்சுமி, இ.ஆ.ப., RIMES இயக்குநர் திரு.ஏ.ஆர். சுப்பையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 26.10.2018**